No. of Printed Pages : **11**

**7468**

| பதிவு எண் Register Number | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# PART - III

# புவியியல் / GEOGRAPHY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

1. மிதமான மக்கள் அடர்த்தி கொண்ட பகுதிகளை உள்ளடக்கியவைகளை தெரிவு செய்க.

(i) அமெரிக்க ஐக்கிய நாட்டின் மத்தியப் பகுதி, வெப்பமண்டல மேற்கு ஆப்பிரிக்கா, ரஷியாவின் மேற்குப் பகுதி மற்றும் கிழக்கு ஐரோப்பா

(ii) இந்தியாவின் தக்காண பீடபூமி, மத்திய சீனா, மெக்சிகோ பீடபூமியின் தெற்குப் பகுதி

(iii) வடகிழக்கு பிரேசில் மற்றும் மத்திய சிலி

(iv) தென் அமெரிக்காவின் அமேசான் பகுதி மற்றும் ஆப்பிரிக்காவின் காங்கோ, கனடா மற்றும் கிரீன்லாந்தின் ஆர்டிக் பகுதி மற்றும் துருவப் பகுதிகள்

(அ) (i), (ii) மற்றும் (iii) (ஆ) (ii) மற்றும் (iii)

(இ) (ii), (iii) மற்றும் (iv) (ஈ) (i) மற்றும் (ii)

Pick out the option which consists of moderate density of population.

(i) Central part of the United States of America, Tropical Western Africa, Western blocks of Russia, Eastern Europe.

(ii) Deccan plateau of India, Central China, Southern portion of the plateau of Mexico.

(iii) North - Eastern Brazil and Central Chile.

(iv) Amazon forest region of South America and Congo forest region of Africa, Arctic area of Canada and Greenland and the Polar regions.

(a) (i), (ii) and (iii) (b) (ii) and (iii)

(c) (ii), (iii) and (iv) (d) (i) and (ii)

2. நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் மனிதர்கள் முதலில் தோன்றிய இடம் என்று மானுடவியலாளர்கள் நம்புவது :

(அ) கிழக்கு ஆப்பிரிக்காவில் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு

(ஆ) யூப்ரடீஸ் மற்றும் டைக்ரீஸ் பள்ளத்தாக்கு

(இ) ஆப்பிரிக்காவின் நைல் பள்ளத்தாக்கு

(ஈ) ஆசியாவின் சிந்து பள்ளத்தாக்கு

Most anthropologists believe that hundreds of thousands of years ago humans first appeared in :

(a) The Great Rift Valley in East Africa.

(b) The Euphrates and Tigris Valley.

(c) The Nile Valley of Africa.

(d) The Indus Valley of Asia.

**3.** 1 மில்லியன் மக்கள் தொகை கொண்ட முதல் நகர்ப்புறக் குடியிருப்பு (மில்லியன் நகரம்) :

(அ) நியூயார்க் (ஆ) இலண்டன் (இ) டோக்கியோ (ஈ) பாரிஸ்

The first urban settlement to reach a population of one million (Million City) is :

(a) New York (b) London (c) Tokyo (d) Paris

**4.** பின்வருவனவற்றுள் எது மிகச் சிறந்த தரமான நிலக்கரி ?

(அ) பிட்டுமினஸ் (ஆ) பீட் (இ) ஆந்த்ரசைட் (ஈ) லிக்னைட்

Which of the following is the best quality Coal ?

(a) Bituminous (b) Peat (c) Anthracite (d) Lignite

**5.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | நைஜர் | (i) | மிகக் குறைந்த கல்வியறிவு விகிதம் |
| (2) | சிங்கப்பூர் | (ii) | மிக அதிகமான பாலின விகிதம் |
| (3) | பர்கினோ பாசோ | (iii) | மிக அதிக இனப்பெருக்க விகிதம் |
| (4) | லாட்வியா | (iv) | மிக அதிக ஊட்டச்சத்து விகிதம் |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(இ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

(ஈ) (1)-(i), (2)-(iii), (3)-(ii), (4)-(iv)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | Niger | (i) | Lowest Literacy rate |
| (2) | Singapore | (ii) | Highest Sex ratio |
| (3) | Burkina faso | (iii) | Highest Fertility rate |
| (4) | Latvia | (iv) | Highest Nutritional density |

(a) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(b) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(c) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

(d) (1)-(i), (2)-(iii), (3)-(ii), (4)-(iv)

6. கீழ்க்கண்டவற்றுள் எது தோட்டப்பயிர் அல்ல ?

(அ) சோளம் (ஆ) தேயிலை (இ) கோக்கோ (ஈ) காப்பி

Which one of the following is not a Plantation Crop ?

(a) Corn (b) Tea (c) Cocoa (d) Coffee

7. பின்வருவனவற்றுள் தப்பிய (எஞ்சிய) எல்லைக் கோட்டிற்கு உதாரணம் யாது ?

(அ) வட ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் எல்லைகள்

(ஆ) பெர்சியா மற்றும் கிழக்கு, மேற்கு ஜெர்மனி இடையே உள்ள எல்லை

(இ) ஐரோப்பிய நாடுகள்

(ஈ) பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் பகுதி

Which of the following is an example of Relict boundaries ?

(a) North Africa and the State boundaries of U.S.A.

(b) Persia and the boundary between East and West Germany.

(c) The countries of Europe.

(d) Pakistan occupied Kashmir.

8. பின்வரும் கூற்றுகளில் எந்த ஒன்று மட்டும் வான்தூனனின் வேளாண் மாதிரியின் அனுமானம் அல்ல ?

(அ) இப்பகுதி முழுவதும் மண்ணின் தன்மையும் காலநிலையும் சீரற்று காணப்படுகிறது.

(ஆ) இது தனித்த ஆக்கிரமிப்பற்ற காடுகளால் சூழப்பட்டு காணப்படுகிறது.

(இ) விவசாயிகள் அதிகபட்ச இலாபத்திற்காக செயல்படுகிறார்கள்.

(ஈ) இந்த நிலப்பகுதி முழுவதும் ஆறுகளாலோ, மலைகளாலோ குறுக்கிடாத சமமான புவிப்பரப்பைக் கொண்டுள்ளது.

Which of the following is not the assumptions of Vonthunen's Model of agriculture ?

(a) The soil quality and climate are not consistent throughout the State.

(b) The isolated State is surrounded by an unoccupied wilderness.

(c) Farmers act to maximize profits.

(d) The land of the State is completely flat and has no rivers or mountains to interrupt the terrain.

9. சரியாக பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்கவும் :

(அ) GALILEO - ஜப்பான்

(ஆ) GPS - அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(இ) BEIDOU - சீனா

(ஈ) GLONASS - இரஷ்யா

Which one is wrongly matched ?

(a) GALILEO - Japan

(b) GPS - United States of America

(c) BEIDOU - China

(d) GLONASS - Russia

10. யுனெஸ்கோவின் கருத்துப்படி ஆபத்தான மொழிகளின் ஐந்து நிலைகளில் குழந்தைகள் பேசாத நிச்சயமாக ஆபத்து நிலையில் உள்ள மொழிகளின் எண்ணிக்கை __________.

(அ) 646 மொழிகள் (ஆ) 457 மொழிகள்

(இ) 374 மொழிகள் (ஈ) 970 மொழிகள்

Of the UNESCO's five levels of language risk, definitely endangered languages that children do not speak are :

(a) 646 languages (b) 457 languages

(c) 374 languages (d) 970 languages

11. உலகச் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி ஆணையத்திற்கு தலைமை வகித்தது யார் ?

(அ) எட்வர்ட் கோல்ட்ஸ்மித் (ஆ) ஜார்ஜ் பெர்கின்ஸ் மார்ஷ்

(இ) ஃப்ரூட்ஸ் ஷூமச்செர் (ஈ) க்ரோ ஹார்லெம் ப்ரண்ட்லண்ட்

Who headed the World Commission on Environment and Development ?

(a) Edward Goldsmith (b) George Perkins Marsh

(c) Fruitz Schumacher (d) Gro Harlem Brundtland

**12.** குறைந்த அளவுத் தீ பரவும் வேகம் :

(அ) 4 - 6 மீ/நொடி (ஆ) 1 - 3 மீ/நொடி

(இ) 6 - 8 மீ/நொடி (ஈ) 3 - 5 மீ/நொடி

The spreading speed of low fire is :

(a) 4 - 6 m/sec (b) 1 - 3 m/sec

(c) 6 - 8 m/sec (d) 3 - 5 m/sec

**13.** பின்வரும் நாடுகளில் எது பேணத்தகுந்த இலக்குகளை அடைவதில் முன்னணியில் உள்ளது ?

(அ) நார்வே (ஆ) டென்மார்க் (இ) பிரான்ஸ் (ஈ) ஸ்வீடன்

Which of the following countries lead in achieving sustainable development goals ?

(a) Norway (b) Denmark (c) France (d) Sweden

**14.** வெள்ளப்பெருக்குப் பேரிடரின் போது __________ சதவீத இறப்புகள் மூழ்குதலால் ஏற்படுகின்றன.

(அ) 55 (ஆ) 75 (இ) 85 (ஈ) 65

Drowning account for __________ percentage of deaths in flood disasters.

(a) 55 (b) 75 (c) 85 (d) 65

**15.** உலகின் மிகப்பெரிய புவி வெப்ப ஆற்றலின் உற்பத்தியாளர் :

(அ) கனடா (ஆ) ரஷ்யா

(இ) சீனா (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

The largest producer of Geo Thermal Energy in the world is :

(a) Canada (b) Russia

(c) China (d) The U.S.A.

## பகுதி - II / PART - II

**குறிப்பு :** **ஏதேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x2=12**

**Note :** Answer **any six** questions. Question No. **24** is **compulsory**.

**16.** குறைவான மக்கள் அடர்த்திக்கான நான்கு காரணங்களைக் கூறுக.

Mention the four reasons for low density of population.

**17.** இணைந்த நகரம் என்பதை வரையறுத்தவர் யார் ? இணைந்த நகரத்திற்கு ஒரு உதாரணம் தருக.

Who defined the term conurbation ? Give an example of conurbation.

**18.** உலகின் மிகப் பெரிய காற்றாலை எங்குள்ளது ? ஜெய்சால்மர் காற்றுப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது ?

Where is the world's largest wind farm located ? In which State, Jaisalmer Wind Park is located ?

19. குடிசைத் தொழில் பற்றி சிறு குறிப்பு வரைக.

Write a short note on cottage industries.

20. இந்திய மொழிகளை முதன்மையாக உள்ளடக்கிய நான்கு மொழிக் குடும்பங்கள் எவை ?

What are the four linguistic families that Indian languages mainly belong to ?

21. ட்ரோன் – சிறு குறிப்பு வரைக.

Write a short note on Drone.

22. ப்ரண்ட்லண்ட் அறிக்கை எதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது ?

What did the Brundtland Report highlight ?

23. தீ விபத்திற்கான காரணங்கள் யாவை ?

What are the causes of fire accident ?

24. சார்புநிலை விகிதம் பற்றி சிறு குறிப்பு வரைக.

Write a short note on Dependency ratio.

## பகுதி - III / PART - III

குறிப்பு : **ஏதேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **33 -வது** வினாவிற்கு **கட்டாயமாக** விடை எழுதவும். **6x3=18**

**Note :** Answer **any six** questions. Question No. **33** is **compulsory**.

25. நகர்ப்புற விரிவாக்கத்திற்கான காரணங்களில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

Write any three causes of Urban Sprawl.

**26.** இந்தியாவில் ஏறக்குறைய 70 சதவிகித எழுத்தறிவற்றோரைக் கொண்டுள்ள ஆறு மாநிலங்களைப் பட்டியலிடுக.

Name six Indian States which account for about 70% of all illiterates in India.

**27.** தாமிரத்தின் பயன்பாடுகள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

State any three uses of Copper.

**28.** தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ?

List out the factors which affects the location of Industries.

**29.** மங்கோலாய்டிலிருந்து காகசாய்டு எவ்வாறு வேறுபடுகிறது ?

How is Caucasoid different from Mongoloid ?

**30.** உளவு செயற்கைக்கோளின் பண்புகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

Write any three characteristics of Spy Satellite.

**31.** இயற்கை வேளாண்மைப் பற்றி குறிப்பு வரைக.

Write a note on Organic farming.

**32.** மூழ்குதலைத் தடுப்பதற்கான வழிமுறைகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

Write any three preventive measures of drowning.

**33.** பாரிஸ் உடன்பாடு பற்றி குறிப்பு வரைக.

Write a note on Paris Agreement.

## பகுதி – IV / PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

**Note :** Answer **all** the questions.

**34.** (அ) நகரமயமாதலின் பிரச்சனைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) கூட்ட நெரிசலின் போது பின்பற்ற வேண்டிய செயல் விதிகளை விளக்குக.

(a) Explain the problems of Urbanisation.

**OR**

(b) Explain the rules of action during stampede.

**35.** (அ) வளர்ச்சியடைந்த மற்றும் பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஏதேனும் மூன்றினை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) இந்தியாவின் முக்கிய மொழிகளைப் பற்றி விளக்குக.

(a) Explain any three characteristics of the developed and the least developed countries.

**OR**

(b) Explain the major languages of India.

**36.** (அ) செயற்கை கோள்களின் வகைகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) காலநிலை மாற்றத்தின் விளைவுகளை விளக்குக.

(a) Describe the types of Satellite.

**OR**

(b) Describe the effects of climate change.

**37.** (அ) உலக தொழிற்துறை வளர்ச்சியின் முதுகெலும்பாக விளங்கும் கனிமம் எது ? அவற்றின் வகைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) மாணவர்களுக்கான அடிப்படை சாலைப் பாதுகாப்பு விதிகளைப் பட்டியலிட்டு, அவற்றுள் ஏதேனும் மூன்றினை விளக்குக.

(a) Which mineral is the backbone of industrial development of the world ? Explain its types.

**OR**

(b) List out basic road safety rules for students and explain any three of them.

**38.** (அ) கொடுக்கப்பட்டுள்ள உலக நில வரைபடத்தில் மில்லியன் நகரங்களைக் குறித்துக் காட்டி சிறு குறிப்பு எழுதுக.

**அல்லது**

(ஆ) உலக புறவரி நிலவரைபடத்தில் உலக பெட்ரோலிய உற்பத்தி மற்றும் பரவல் மையங்களைக் குறித்து அதைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

(a) On the outline map of the world, mark the Million Cities and give a short note on them.

**OR**

(b) On the outline map of the world, show the petroleum production and distribution centres of the world and write a brief account of them.

**- o 0 o -**